# தமிழ் இலக்கியங்களில் பெண் ஆளுமைகள்

தொகுப்பாசிரியர்கள்

முனைவர் எஸ்.சுமையா

முனைவர் இரா. ஹேமலதா

மதிப்புறு முனைவர் பொன். ஆதவன்

முனைவர் வே.அகிலா

வெளியீடு

தமிழ்த்துறை

தாசிம்பீவி அப்துல் காதர் மகளிர் கல்லூரி

கீழக்கரை. இராமநாதபுரம் மாவட்டம்.

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | **தமிழ் இலக்கியங்களில் பெண் ஆளுமைகள்** |
| தொகுப்பாசிரியர்கள் | : | முனைவர் எஸ்.சுமையா<br>முனைவர் இரா. ஹேமலதா<br>மதிப்புறு முனைவர் பொன். ஆதவன்<br>முனைவர் வே.அகிலா |
| உரிமை | : | பதிப்பகத்தார்க்கு |
| நூல்பொருள் | : | ஆய்வுக்கோவை |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பாண்டு | : | ஜூலை 2026 |
| அளவு | : | 1/8 டெம்மி |
| பக்கங்கள் | : | 530 |
| விலை | : | ரூ.500/-- |
| வடிவமைப்பு | : | கா. குணசேகரன் |
| அச்சு | : | எஸ்.எஸ்.எண்டர்பிரைசர்ஸ்,<br>சென்னை<br>(9940802363) |
| வெளியீடு | : | தமிழ்த்துறை<br>தாசிம்பீவி அப்துல் காதர் மகளிர் கல்லூரி<br>கீழக்கரை. இராமநாதபுரம் மாவட்டம்.<br>8778911868 |
| ISBN | : | 978-93-6076-971-0 |


ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களின் பொறுப்புக்குரியவை

48. பெண் ஆளுமை: இலக்கியமும் சமூகமும் வெளிப்படுத்தும் பரிமாணங்கள்
*முனைவர் சாந்தி இரவீந்திரன்* 350

49. பெண்ணிய மறுவாசிப்பில் காரைக்கால் அம்மையார்: எம்.ஏ. சுசீலா கட்டுரையை முன்வைத்து.....
*முனைவர் சா.மரகமதணி* 354

50. மகாபாரதத்தின் பெண் ஆளுமைகள்
*முனைவர். ச.பத்மா* 363

51. இராஜம் கிருஷ்ணா நாவல்களில் பழங்குடிகள்
*முனைவர் நா. தீபாராணி* 372

52. சங்ககால பெண்களின் விருந்தோம்பல் முறைகள்
*முனைவர் ஜா. கிருஷ்ணகுமாரி & முனைவர் ரங்கராஜன்* 380

53. நற்றிணையில் இல்லற மாண்புகள் போற்றும் இல்லாள்
*முனைவர் மா.தே.அருண் மொழி நங்கை* 389

54. ‘ காரைக்கால் அம்மையாரும் ஆண்டாளும்’ – ஓர் ஒப்பாய்வு
*திருமதி.து.தீபா & முனைவர். திரு. அ.இருதயராஜ்* 398

55. புறநானூற்றில் காவல் பெண்டுவின் பெருமிதம்
*மதிப்புறு முனைவர் இர. தேன்மொழி* 405

56. அம்பைச் சிறுகதைகளில் பெண்களின் வாழ்வியல்
*அ.இன்பரசு & முனைவர் த.சங்கீதா* 410

57. கண்ணகியும் வழக்குரை காதையும்
*முனைவர் து. சரஸ்வதி* 417

58. குணமாலையாரின் ஆளுமை
*முனைவர் இரா.ஹேமலதா* 422

59. TAMIL WOMEN'S LITERARY LEADERSHIP: TRADITION, TRANSFORMATION, AND GLOBAL IMPACT
*Dr.P.JAYACHITRA* 425

60. Bottom of Form Women's Aspirations and Social Reality: A Study of Emma Bovary in Gustave Flaubert's Madame Bovary
*Mrs. P.T. ANBU HANNAH DORA* 436

61. வீரத்தின் வேர்கள் பெண்கள்
*ரா. சுமித்ரா முனைவர் & க. மோகன்காந்தி,* 447

62. இலக்கியத்தை ஆண்ட பெண் ஆளுமைகள்.
*ஆனந்தி .தே* 456

63. குறுந்தொகையில் பெண்பாற் புலவர்களின் ஆளுமைப் பண்பு
*முனைவர் யு.துர்காதேவி* 463

# இராஜம் கிருஷ்ணா நாவல்களில் பழங்குடிகள்

**முனைவர் நா. தீபாராணி**

உதவிப் பேராசிரியர். தமிழ்த்துறை

வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப மற்றும்

உயர் ஆராய்ச்சி நிறுவனம் பல்லாவரம், சென்னை.

## முன்னுரை

இரண்டாயிரம் ஆண்டுகாலத் தமிழிலக்கியம் தமிழ் மக்கள் வாழ்வின் ஆவணமாக உள்ளது. சமூக மாறுதல்கள், வாழ்க்கை, வன்கொலைகள், போர்கள் ஆகியன இலக்கியங்களில் முறைகள், பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றோடு சாதி என்ற இழிவும் இலைமறை காயாக இடம் பெற்றுள்ளது. சாதி என்ற கருத்துக்கு ஆதாரமாக வைதீக இந்து மதம் மனிதர்களிடையே பிறப்பின் அடிப்படையில் வேறுபாடுகள் உள்ளன என்று கூறுகின்றது. ஆனால், தமிழ்மறை திருக்குறள் இந்தப் பிரிவினைக்கு எதிராகப் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று பகர்கின்றது. இதேபோல் சாதிக்குத் துணைநிற்கும் வைதீகக் கொள்கைக்கு எதிராகப் புத்த, சமண, சித்தர் மரபுகள் இருந்து வந்துள்ள நிலையையும் நாம் தமிழ் இலக்கியங்கள்வழிகண்டோம்.

பழங்குடியினர் சமூக வரலாறும், வாழ்க்கை சமூகத்தின் ஒட்டுமொத்த பிணைந்தவைகளாகும். இவற்றுடன் வைத்தே நிலையை அணுகவேண்டும். . பழங்குடிகள் யார்? என்பதும் பல்வேறு பிரிவுகளையும், அவர்தம் குடியிருப்புகள், உணவு,

உடை தொழில்கள். நம்பிக்கைகள் போன்றவையும் இக்கட்டுரை ஆராயப் பெறுகின்றன.

**பழங்குடிகள் பெயர் விளக்கம்**

சிறுகுழுக்கள், குழுக்கள், கால்வழி பெருங்கால்வழி, சிற்றூர் முதலிய வட்டாரக் குழுக்களை உள்ளடக்கியதும். பொதுவான பண்பாட்டையும் கொண்டதுமான சமூக அமைப்பின் ஒரு முறைமையே பழங்குடி எனப்படும்." Tribes எனும் ஆங்கிலச் சொல்லிற்குப் பழங்குடி' என்று மொழிபெயர்க்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகிறது. இனக்குழு மக்கள் என்றும், மலைவாழ் மக்கள் என்றும் இச்சொல்லுக்கு வேறு பெயர்கள் தமிழறிஞர்களால் வழங்கப்படுகின்றன. வெரியர் எல்வின். லூயிஸ் போன்ற அறிஞர்கள் இட்ரைப்ஸ் (Tribe) எனும் சொல்லை நாகரீகத்தில் பின்தங்கியவர்கள் என்னும் பொருளிலேயே பயன்படுத்துகின்றனர். இச்சொல்லின் பொருள் தெளிவின்றி இருப்பதாக டி.என். மஜூம்தார் குறிப்பிடுகின்றார்.மேலும் இவர், இச்சொல் பண்பாட்டாலும் மொழியாலும் ஒரே நிலையுடைய ஒரு குழுவினரைக் குறிப்பதாக விளக்கம் தந்துள்ளார்.

**பழங்குடி மக்கள் யார்?**

பழங்குடி மக்கள்' என்றதும் நம் நினைவுக்கு வருவது நீலகிரி மலைவாழ் மக்கள் ஆவர். நீலகிரியைத் தாயகமாகக் கொண்டு வாழும் படகர் என்னும் மக்கள், இந்த மலையின் பெருமைக்கும், வளத்துக்கும் உரியவர்கள். வடக்கு மைசூர்ப் பகுதியிலிருந்து. தமிழ்நாட்டின் நீலகிரி மலைப்பகுதி வரை இவர்கள் குடியேறியதாலேயே இவர்கள் வடகர். படகர் எனப் பெயர் பெற்றனர் என்பர். இவர்கள் தாங்கள் இருக்கும் இருப்பிடத்தை விட்டு வரக் காரணம் என்ன? என்ற கேள்விக்குக் குறிஞ்சித்தேன்" நாவலில் பதில் கொடுக்கிறார் ஆசிரியர்.

இந்நாவலில் இடம்பெறும் முதன்மை பாத்திரமான மாதியின் கனவின் மூலம் படகர்களின் வரலாறு விளக்கம் பெறுகிறது. (இராஜம் கிருஷ்ணன் குறிஞ்சிதேன்.முன்னுரை பக்.1 )கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் மைசூரை மையமாகக்கொண்டு

அரசாண்ட திப்புசுல்தான் ஆட்சியின் போது படகர்கள் மைசூரிலிருந்து பண்டியூர்க் காட்டின் வழியாக நீலகிரிக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் வரவிற்கு முக்கியக்காரணம் கூறப்படும் கதை பின்வருமாறு:

ஒருநாள் கன்னடப் பெண் ஒருத்தி, வயலில் இருந்த பசுவிடம் பால் கறந்து கொண்டிருந்தாள். அவளுடைய அழகைக் கண்ட சுல்தான், ஒரு சேவகனை அவளிடம் அனுப்பி தன்னை மணம் செய்து கொள்ள அழைத்தான். அப்போது, அந்த பெண்ணின் சகோதரன் அவ்வழியே வந்து கொண்டிருந்தான். அது கண்டு தனிமையாக வந்திருந்த சேவகன் பயந்து அரண்மனை ஆட்களைத் துணைக்கு அழைத்துவர சென்றான். இதனால் குடும்பத்தினர் பயந்து வீட்டை விட்டு காட்டை நோக்கி ஓடினார்களாம்.

இவர்கள் ஓடியதைக்கண்டு அவர்கள் பின்னே சேவகர்கள் துரத்த, ஓடி வந்த அம்மங்கை நடுவில் நீர் வற்றியிருந்த ஆற்றைக் கடந்து வந்தாள் என்றும், பின்பு தன் கற்பைக் காத்துக் கொள்ளும் பொருட்டு நஞ்சுண்டேசரை வேண்ட ஆற்றில் வெள்ளம் குபுகுபுவென்று பெருகி சேவகர்களைத் திரும்பி ஓடச் செய்தது என்றும் கூறுவர். இவ்வாறு கர்ண பரம்பரை வரலாறாகப் படகர் மக்களிடம் வழங்கி வருகிறது. (பிலேஇருதயநாத் ஆதிவாசி மறைந்த வரலாறு பக் 102-103) பழங்குடி படகர்கள் நீலகிரிக்கு இடம் பெயர்ந்த செய்தி இங்ஙனம் நாட்டார் கதை வழி பெறப்படுகிறது. மேலும், பிலோ இருதயநாத் என்னும் மானுடவியலறிஞர் ஆதிவாசிகள் யார்? என்பதைப் பின்வருமாறு விளக்குகிறார்.

பண்டைக் காலத்தில் ஓர் அரசன் போரில் தோல்வி அடைந்துவிடும் போது. புதிய அரசன் அங்குள்ள மக்களைக் கொடுமையாக நடத்தினான். அதனால் "கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டின், கடும்புலி வாழும் காடு நன்றே" என்று சிலர் காடுகளுக்குப் போனார்கள். சிலர், 'சான்றோரில்லாத் தொல்பதி இருத்தலின் தேன்றேர் குறவர் தேயம் நன்றே" என்று நாட்டை விட்டுக் காட்டில் குடி புகுந்தார்கள். காடுகளுக்குச் சென்றவர்கள்

வேட்டையாடியும், பயிர் செய்தும் காலம் கழித்தார்கள். இங்ஙனம் வேட்டையாடியதால் இவர்களைப் பிற்காலத்தில் வேட்டைக்காரரர்' என்றும்: வேடர் என்றும் அழைத்தனர். இவர்கள் அன்று கொடுங்கோல் மன்னனுக்கு அஞ்சிக் காடுகளுக்குச் சென்றது ஏன்? பல்லாண்டுகளுக்கு முன் மக்கள் தொகை குறைவாக இருந்தன. காடுகள் அதிகமாக இருந்தன. அதனால், காடுகளுக்குச் சென்றனர். இவ்வாறு அன்று காட்டில் மறைந்து வாழ்ந்த மக்களுக்குக் காடர்' என்று பெயர் தருகிறார் (ஆசிரியர்.பிலேஇருதயநாத் காட்டில் மலர்ந்த மல்லிகை.பக் 52)

இதே கருத்தைக் காட்டில் மலர்ந்த மல்லிகை' என்ற ஆராய்ச்சி நூலில் ஆசிரியர்பின்வருமாறு விளக்குகிறார்.( இராஜம் கிருஷ்ணன் குறிஞ்சிதேன்.முன்னுரை பக்.19 ) பண்டைக் காலத்தில் அரசனுக்குப் பயந்து மலைகளிலும் அடர்ந்த காடுகளிலும், வந்து தங்கியிருப்பவர்களை இன்றும் காணலாம். பண்டைக் காலத்தில் இப்படி சொத்து சுதந்திரங்களை விட்டுக் காடுகளுக்குப் போனவர்களுக்கு மலைவாசி: 'காட்டுவாசி' ஆதிவாசி என்ற பட்டம் கொடுத்துள்ளார்கள் என ஆசிரியர் கூறுகிறார்.

ஓர் இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்குக் குடிபெயர்ந்த மக்களிடையே தொழில் அடிப்படையில் பல பிரிவுகள் ஏற்பட்டன. ஹருவர், உடையர். அதிகாரி, கணக்கர், படகர், தொரியர் என்ற பிரிவினர் மற்ற பிரிவினருக்குப் பணிபுரியும் மக்களாக ஒவ்வொரு ஹட்டியிலும் (சிறுகிராமம்) குடியிருந்தனர். இராஜம் கிருஷ்ணன் குறிஞ்சிதேன்.முன்னுரை பக்.23 )

**குடியிருப்புகள்**

மலைச் சரிவுகளிலும் சமதளங்களிலும் மலை உச்சியிலுமாகப் பல குடியிருப்புகளில் பழங்குடியினர் வாழ்கின்றனர். காற்றும் மழையும் மிகுந்த மலைப்பகுதிகளில் பொதுவாகக் குடிசைகள் குறுகிய அமைப்பு உடையனவாக அமைக்கப்பட்டும். ஈச்ச இலைகளினால் பின்னப்பட்ட தட்டிகளைச் சுற்றுச் சுவர்களாகக் கட்டுகின்றனர். பொதைப்பில் கிடைக்காத இடங்களில் ஈச்ச

இலையையே மேற்கூரையாகவும் பயன்படுத்துகின்றனர். குடிசைகள் சதுர அமைப்பிலும், நீள் செவ்வக அமைப்பிலும் அமைகின்றன. குடிசைக்குள். மண்தரை மெழுகப்படாத நிலையிலேயே காணப்படும்.

குறிஞ்சித்தேன்' நாவலில் பழங்குடி மக்களின் வீட்டமைப்பு பின்வருமாறு: ஒரே மாதிரியான ஹட்டியின் இல்லங்கள் தாழ்ந்து குறுகிய வாயில்களைக் கொண்டவையாய்,இரு முக்கியமான பகுதிகளை அமையப் பெற்றவையாய் இருக்கும். முன்புறம் சிறு வரந்தாவைப் போன்ற பகுதியை ஒட்டி, ஒவ்வொரு வீட்டிலும் வெளிமனை என்ற பகுதியும் ஒன்று இருக்கும். அதை அடுத்து உள்மனை என்ற பகுதியில் வாயிலுக்கு நேர் வளைவான வாயில் சமையற்பகுதியைப் பிரிக்கும். உள்மனையின் வலது ஓரத்தில் பால்மனை அல்லது பூஜையறை சுவரோடு ஒட்டிய வளைவு வாயிலுடன் இணைந்திருக்கும். உள்மனையின் நடுவே, சமையலறை வாயிலில் சுவர்த் தண்டில் எல்லா இடங்களுக்கும் வெளிச்சம் தெரியும் வண்ணம் தீபமடம் அமைக்கப் பெற்றிருக்கும்.

மேலே மூங்கிலால் ஆன சேமிப்புப் பரண்களும் அமைந்திருக்கும். இதேபோல், "வேருக்கு நீர்" என்ற நாவலில் பழங்குடிமக்களின் உறைவிடங்கள் இடம் பெறுகின்றன. மூங்கிற் தட்டிக்குமேல் ஓடுகள் வேயப் பெற்ற இல்லம். இவ்வில்லம் பதினான்குக்குப் பதினாறாய் மண்ணில் மெழுகிய தளம், இல்லத்தின் சுவர் ஒன்றில் கொக்கியில் அரிக்கேன் விளக்கு தொங்குகிறது.இராஜம் கிருஷ்ணன் வேருக்கு நீர் பக் 12-13 மேலும், காற்றும் மழையும் மிகுந்த மலைப்பகுதியில் இருப்பதால் குடிசைகள் குறுகிய அமைப்பு உடையனவாக அமைக்கப் படுகின்றன.

மேலும், பழங்குடிகளின் குடிலைப் பின்வருமாறு விளக்குகிறார். வீடுகள் உயரம் குறைவாகவே வாசற்படியே கட்டப்பட்டிருக்கும். இதற்கேற்றாற்போல் தாழ்வான அமைக்கப்பட்டிருக்கும். இடத்திற்கு ஏற்றாற்போலும் கிடைப்பதைக் கொண்டும் மூங்கில் தழை, பொதைப்புல் ஆகியவற்றைக் கொண்டு கூரைகள் வேய்ந்து கொள்கின்றனர்.

பக்கச் சுவர்களும் வரிச்சுகளாலேயே பின்னப்பட்டிருக்கும் என்று பழனிமலைப் பழங்குடிகள் வரலாறும் வாழ்க்கை முறைகளும்" என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. ( ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டு சங்கம் பழமலை பழங்குடிகள் வரலாறும் வாழ்க்கைமுறைகளும் பக் 14)

**உணவுப் பழக்கம்**

"உணவு காளான்கள் உணவுப் பொருள்களாகின்றன. பழங்குடிகளுக்குக் காடுகளில் கிடைக்கும் கிழங்கு, கனி வகைகள் மற்றும் அரிசி உணவைச் சில வேளைகளில் மட்டுமே இவர்கள் உண்கின்றனர். இவர்கள் காலை, ரவு என ஒவ்வொரு நாளும் இரு முறை மட்டுமே உணவு உட்கொள்கின்றார்கள். கேழ்வரகு, தினை, சாமை சோளம் ஆகியவற்றைக் கொண்டு உப்பில்லாத களி செய்து உணவாக உண்கின்றனர். பெண்கள் இரண்டு தடித்த குச்சிகள் (கம்புகள்) கொண்டு இருகைகளாலும் களி கிண்டுகின்றனர். இக்களியைத் தட்டையான கம்பு (அகப்பை) கொண்டு அருகில் கிடைக்கும் தேக்கு மற்றும் ஆமணக்கு இலைகளில் வைத்து உண்கின்றனர்(.டாக்டர் பீ. நசீமுதீன்.இடுக்கி மாவட்டப் பழங்குடி மக்களின் வழக்காற்றியல் பக்.45 )

மேலும், பழங்குடி மக்கள் சாமைச்சோளம், மணக்கும் நெய் வட்டில் அமுது மொச்சைப் பருப்பின் புளியில்லாத குழம்பு, பாலும் வெல்லமும் நெய்யும் சேர்ந்து பொங்கல் சமைப்பர். இவர்கள் உண்பதற்குத் தையல் இலைகள் மினிகேலைகளைப் பயன்படுத்தினர். கடலை உருண்டையும் வெல்லத் தோசையும் செய்து உண்ணுகின்றனர். இவ்வாறு குறிஞ்சித்தேன் நாவலில் பழங்குடி மக்களின்உணவு வகைகளைப்பற்றி ஆசிரியர் விளக்குகிறார்இராஜம் கிருஷ்ணன் குறிஞ்சிதேன். பக்.37 .

நாகரீகம் அடைந்த பிறகு, பழங்குடி மக்களின் உணவில் மாற்றம் ஏற்பட்டிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் "கோதுமைக் சோறும் குழம்பும் ஆக்கிடு என்று கதைத் தலைவன் வாயிலாக ராஜம் கிருஷ்ணன் வெளிப்படுத்துகின்றார். இராஜம் கிருஷ்ணன் குறிஞ்சிதேன். பக்.37இவர்கள் வாழும் மலையடிவாரத்தில் மாமரங்கள் உள்ளதால் மாங்காயை விரும்பி உண்கின்றனர். ஆடுகளையே வெட்டி தின்று வந்த இவர்கள்

கோழி, மீன், கருவாடு போன்றவற்றையும் உண்கின்றனர். ரொட்டியும் துவையலும் விரும்பி உண்ணும் இவர்கள் சந்தைக்குச் செல்வதால் அங்கிருந்து காய்கறிகளையும், பெரியகடலை போன்றவற்றையும் வாங்கிவந்து சமைத்து உண்கின்றனர்: ஆடை

பழங்குடிகளான "தொல்வேடன்" எனும் இனத்தார் தற்காலத்திலும் தழையாடை அணிவதைக் காணமுடிகிறது. கரவறியாத காட்டு நாயகன்மார் நிர்வாணமாக இன்றும் காடுகளில் அலைகின்றனர். திராவிட இனத்தார் எனக் கருதப்படும் கோண்ட் மற்றும் கதபரும் இலையாடை, மரவுரியாடை ஆகியவற்றை அணியும் வழக்கம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு, இவர்கள் வாழும் பகுதியில் காடுகள் மிக அடர்த்தியாக இருந்ததால் அடைமழை பெய்யுமென்றும். அக்கால இரவுகளில் பொது இடத்தில் பெரும் தீ மூட்டி ஆணும் பெண்ணுமாக நிர்வாண கோலத்துடன் இவர்கள் குளிர்காய்வர் என்றும் குறிப்பிடுவர். இலையாடைக்கு -வட்டக்கண்ணி" எனும் மரத்தின் அகலமான மெல்லிய இலைகளைப் பயன்படுத்துவார்களாம். இவ்வாடைகள் காட்டுக் கொடியினால் பின்னப்பட்டு கட்டப்படுமாம். எதிரிகளிடமிருந்தும் விலங்குகளிடமிருந்தும் தம்மைக் காத்துக் கொள்ளவே முன்பு தழையாடைகள் இவர்களால் அணியப்பட்டிருக்கலாம் எனக் கருதமுடிகிறது.

பின்னர். கிடைக்கும் இயற்கை வசதிகளில் தன் தேவையை நிறைவு செய்து கொள்ளும் நோக்கில் இவ்வாடை முறை பின்பற்றப்பட்டிருக்கலாம் என்றே தோன்றுகிறது. மண்ணில் வாழும் மலைமக்கள் என்னும் ஆய்வு நூலில் லம்பாடி என்கிற மலைவாசிகளின் உடையைப் பின்வருமாறு விளக்குகிறார் ஆசிரியர்.

இதற்குமுன் லம்பாடி உடையிலேயே இருந்த பெண்கள். தற்போது பின் கொசுவம் வைத்துச் சேலையும் ரவிக்கையும் அணிகின்றனர். சிறுவர்கள் பிறசாதி மக்கள் போன்று பாவாடை சட்டை அணிகின்றனர். ஆண்களும் தற்போது வேட்டியும் சட்டையும் உடுத்திக் கொள்கின்றனர். வையாபுரிப் பிள்ளை எஸ்.குறுந்தொகை பாடல் எண்.214,235,125,159.

மாற்றம் நகரமக்கள் தொடர்பாலும் திரைப்படங்களைப் பார்ப்பதாலும் ஏற்பட்டுள்ளது. இவ்வகையில் ராஜம் கிருஷ்ணனும் குறிஞ்சித்தேன்." "வேருக்கு நீர்"ஆகிய நாவல்களில் பழங்குடிமக்களை நாகரிகமடைந்தவர்களாகப் படைத்துள்ளார் என்பதும் இவண் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.இதுபோன்று தேன் எடுத்தல்.மரம் வெட்டுதல், நம்பிக்கை கள், கனவு நம்பிக்கை, காடுகள் என் பல்வேறு செய்திகளை தன் நாவல்களில் பதிவுச் செய்துள்ளார்.

**முடிவுரை**

மனிதர்கள் வாழ்வில் கடைபிடிக்கும் பழக்கமானது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வழக்கமாகி அதுவே அனைவராலும் பின்பற்றப்படும் படிப்படியாக மாறிவிடுகின்றது. அது இடத்திற்கு இடம் இனத்திற்கு இனம் மாறுப்படுகின்றது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மேற்கொள்ளும் பழக்கவழக்கங்கள் போன்றவற்றை மிக அழகாக தன்னுடைய நாவல்களில் எடுத்துக்கூறியுள்ளார்.மேலும் நாவல்களில் இடம்பெறும் பகுதிகள் ஹட்டி மலைச்சரிவு போன்ற பகுதிகளும் பசுவையும் எருமையும் தெய்வமாக வணங்குகின்ற முறையையும் இவர்களது முக்கிய தொழில் ஆடு மாடு மேய்த்தல் வேளாண்மை செய்தலும் வேட்டையாடுதலும் தேன் எடுத்தலும் அடிக்கடி நடைபெறும். இவர்களின் மூடநம்பிக்கைகளை பற்றியும் மிக விரிவாக தன்னுடைய நாள் வழியில் எடுத்துக் கூறுவதோடு அவர்களின் வாழ்வியல் சிக்கல்களையும் தன் நாவலில் பதிவு செய்துள்ளார்.

**துணைநூற்பட்டியல்**


1 ராஜம் கிருஷ்ணன், வேருக்கு நீர் ,சென்னை 1978(மு)

2. பானுவின் காதலன், மங்கள நூலகம்.சென்னை, 1958 (முய)

3. மலையருவி,கலைமகள் காரியாலயம் சென்னை, 1979 (மு.ப)

4. குறிஞ்சித் தேன்,பாரி புத்தகப் பண்ணை,சென்னை, 1963(மு.ய)